04.04.2025

O.S.No.20/2019

PW1 திரு.சிவபிரகாசம் ( 1 முதல் 5 வரை உள்ள பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி):-

சாட்சி வா.த.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

நாகம்மாள் பட்டா வாங்க எந்த தேதியில் மனு செய்திருந்தார் என்ற விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. நாகம்மாள் பட்டாக் கோரி தாக்கல் செய்த மனு சம்மந்தமான விவரங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கின்றேனா என்ற விவரம் எனக்குத் தெரியவில்லை. நான் தாக்கல் செய்திருக்கின்ற வா.த.சா.ஆ.1 ஆவணத்தில் ராமகிருஷ்ணன் என்பவருக்கு அஞ்சம்மாள் மற்றும் ராஜி ஆகியோர் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தில் 6000 ச.அடி அவர்களுக்கு சொந்தம் என்றும் அதில் 3000 ச.அடி கிரையம் செய்து கொடுப்பதாக குறிப்பிட்டிருக்கின்றதா என்று சொன்னால் ஆமாம் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. வா.த.ஆ.1 பத்திரத்தில் அந்த சொத்து அஞ்சம்மாளுக்கு பூர்வீகமான சொத்து என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பூர்வீகமானது என்றால் அந்த சொத்து அஞ்சம்மாளின் தாய், தகப்பன் மூலமாக வந்ததா என்றால் ஆமாம் அப்படி தான் வந்தது. அஞ்சம்மாளின் தாய், தகப்பன் மூலமாக அவருக்குக் கிடைத்தது என்றால், கிரைய பத்திரமோ வருவாய் ஆணங்களின் பதிவுகளோ இருக்கின்றதா என்றால் அப்படி பட்ட ஆவணங்கள் எதுவும் இல்லை. அஞ்சம்மாளின் கணவர் பெயர் எனக்குத் தெரியாது. அஞ்சம்மாள் எந்த ஆண்டு இறந்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அஞ்சம்மாளின் ஒரே வாரிசு ராஜி. அஞ்சம்மாளின் ஒரே வாரிசு தான் ராஜி என்பதை காட்டுவதற்கு வாரிசு சான்றிதழ் எதனையும் நான் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்துக்கள் எப்படி நாகம்மாள் மற்றும் ரேவதி பெயருக்கு வந்தது என்று சொன்னால் ராஜியின் மனைவி பெயர் நாகம்மாள், மகள் பெயர் ரேவதி இந்த வகையில் இவர்கள் பெயருக்கு வந்தது. ராஜி எப்பொழுது இறந்ததார் என்றால் தேதி எனக்குத் தெரியாது. அவர் இறந்ததற்கு

இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் இருக்கின்றது. இந்த சான்றிதழ்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கின்றேன். நான் அப்படி பட்ட ஆவணங்கள் எதனையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்ற சொன்னால் அது என்னுடைய வழக்கறிஞருக்கு தான் தெரியும். எந்த வருடம் நாகம்மாள், ரேவதி பெயரில் ஆவணங்கள் ஏற்பட்டது என்றால் சைதாப்பேட்டை பதிவு அலுவலகத்தில் பதிவு செய்தோம் எனக்கு தேதி ஞாபகம் இல்லை. செட்டில்மெண்ட் பதிவு செய்யப்பட்ட 10நாட்களில் எனக்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது. நாகம்மாள், ரேவதி பெயரில் எழுதிக்கொடுக்கப்பட்டதாக சொல்லும் செட்டில்மெண்ட் பத்திரத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது என்னுடைய வழக்கறிஞருக்குத் தான் தெரியும். இந்த வழக்கை பொது அதிகார முகவர் என்னும் வகையில் தாக்கல் செய்தது நான் தான். நான் தாக்கல் செய்திருக்கின்ற அசல் வழக்கு எண்.435/2018 என்ற வழக்கின் வாதுரையில் கண்டுள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். இந்த வழக்குரை பக்கம் 3, பத்தி 5ல் 7வது வரியில் அசல் வழக்கு எண்.18/1994 என்ற வழக்கில் ராமகிருஷ்ணன் என்பவர் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி தாக்கல் செய்த வழக்கு பூந்தமல்லி சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த பொழுது தாவா சி பட்டிகை சொத்தை ராமகிருஷ்ணன் ஆக்கிரமிப்பு செய்தார் என்று சொல்லப்பட்டிருக்கின்றது என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில் இருந்த பொழுதே ராமகிருஷ்ன் சி மற்றும் டி பட்டிகை சொத்தை ஆக்கிரமிப்பு செய்துவிட்டார் என்றால் சரிதான். அவருக்கு 3000 ச.அடி கிரையம் செய்த வகையில் 4500 ச.அடி நிலத்திற்கு அவர் பட்டா வாங்கிவிட்டார். நான் தாக்கல் செய்திருக்கின்ற அசல் வழக்கு எண்.435/2018 என்ற வழக்கின் வாதுரையில் பக்கம் 4 பத்தி 6ல் வழக்கு காரண பத்தியில் 1996ம் ஆண்டு ராமகிருஷ்ணன் தாவா சொத்தில் அத்து மீறி ஆக்கிரமிப்பு செய்துவிட்டு வெளியேற மறுத்துவிட்டார் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் சரிதான். 1996லேயே தாவா சொத்தை ராமகிருஷ்ணன் ஆக்கிரமித்ததாக நான் சொல்லியிருக்கின்ற

நிலையில் இந்த வழக்கு ஏன் கால தாமதமாக தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது என்றால் கால தாமதம் எதுவும் இல்லை. அப்பொழுதே வழக்கு தாக்கல் செய்து விட்டேன். நான் தாக்கல் செய்திருக்கின்ற அசல் வழக்கு எண்.20/2019 என்ற வழக்கின் வாதுரையில் கண்டுள்ள விரங்கள் எனக்குத் தெரியும். இந்த வழக்குரை பக்கம் 3, பத்தி 5ல் 7வது வரியில் அசல் வழக்கு எண்.18/1994 என்ற வழக்கில் ராமகிருஷ்ணன் என்பவர் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி தாக்கல் செய்த வழக்கு பூந்தமல்லி சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த பொழுது தாவா சி பட்டிகை சொத்தை ராமகிருஷ்ணன் ஆக்கிரமிப்பு செய்தார் என்று சொல்லப்பட்டிருக்கின்றது என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில்இருந்த பொழுதே ராமகிருஷ்ணன் சி மற்றும் டி பட்டிகை சொத்தை ஆக்கிரமிப்பு செய்துவிட்டார் என்றால் சரிதான். அவருக்கு 3000 ச.அடி கிரையம் செய்த நிலையில் 4500 ச.அடி நிலத்திற்கு பட்டா வாங்கிவிட்டார். நான் தாக்கல் செய்திருக்கின்ற அசல் வழக்கு எண்.20/2019 என்ற வழக்கின் வாதுரையில் பக்கம் 4 பத்தி 6ல் வழக்கு காரண பத்தியில் 1996ம் ஆண்டு ராமகிருஷ்ணன் தாவா சொத்தில் அத்து மீறி ஆக்கிரமிப்பு செய்துவிட்டு வெளியேற மறுத்துவிட்டார் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் சரிதான். 1996லேயே தாவா சொத்தை ராமகிருஷ்ணன் ஆக்கிரமித்ததாக நான் சொல்லியிருக்கின்ற வகையில் இந்த வழக்கு ஏன் கால தாமதமாக தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது என்றால் கால தாமதம் எதுவும் இல்லை. அப்பொழுதே வழக்கு தாக்கல் செய்து விட்டேன். நான் தாக்கல் செய்திருக்கின்ற வா.த.சா.ஆ.6 ஆவணத்தின் படி ராமகிருஷ்ணன் அவர்கள் அவருடைய மனைவி வசந்தா மற்றும் அவரின் மகன் மோகனசுந்தரம் பெயரில் தாவா சொத்தினை செட்டில்மெண்ட் செய்து வைத்திருக்கின்றார் என்றால் சரிதான். ஆனால் அவர் வாங்கிய 3000 ச.அடி நிலத்திற்கு பதிலாக 4000 ச.அடி நிலத்தை பதிவு செய்திருக்கின்றார். ராமகிருஷ்ணன் செட்டில்மெண்ட் செய்து வைத்த விவரம் எனக்கு எப்பொழுது தெரியும் என்றால் ரேவதி பெயரில் டாக்குமெண்ட் போட்டு தாசில்தார் அலுவலகம் சென்ற பின்பு தான் தெரியும். அது எந்த

வருடம் என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. 16.03.2015ல் ரேவதி, வாதி நாகம்மாளுக்கு செட்டில்மெண்ட் செய்து வைத்தார் என்றால் சரிதான். எவ்வளவு பரப்பளவு இடத்தை செண்டில்மெண்ட் செய்து வைத்தார் என்றால் மொத்த சொத்து இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து சில்லறை இடத்தில் பாதி சொத்தை செட்டில்மெண்ட் செய்து வைத்தார். இந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண் எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண்ணும் ஞாபகம் இல்லை. 16.03.2015ல் செட்டில்மெண்ட் செய்த பிறகு பட்டா வாங்க சுமார் ஒரு மாதம் கழித்து தாலுகா அலுவலகம் சென்றோம். 2015ம் ஆண்டு ஜீன், ஜீலை மாதத்திலேயே பிரதிவாதிகள் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி எனக்கு தெரியவந்தது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்திருக்கின்ற வழக்குகளில் சொல்லப்பட்டிருக்கின்ற சொத்தின் சர்வே எண்கள் மற்றும் பிரதிவாதிகள் பெயரில் உள்ள சொத்தின் சர்வே எண்கள் வெவ்வேறு என்றால் சரியல்ல. நான் தாக்கல் செயதிருக்கின்ற வழக்குகளில் தாவா சொத்தின் சர்வே எண்.187/5 என்று சொல்லப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. பிரதிவாதிகள் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் பத்திரம், பட்டாவின் படி சர்வே எண்.248/9 என்று சொன்னால் அது தவறு. நான்கோரியிருக்கின்ற விளம்புகை பரிகாரத்தை 2018 ஜீலை மாதத்திற்குள் தாக்கல் செய்யாததால் என்னுடைய வழக்கு காலவரம்பு சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி 1996லேயே சுவாதீனத்திற்கு வந்துவிட்டபடியால் 12 வருடகாலமான 2008க்குள் நான் காலி சுவாதீனம் கோரும் பரிகாரத்தை கோராததால் என்னுடைய வழக்கு இந்த வகையிலும் கால வரம்பு சட்டத்தினால் பாதிக்கபட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேலும் பிரதிவாதிகள் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் பத்திரத்தினை ரத்து செய்யகோரும் பரிகாரத்தை நான் கோராததால் வழக்கை கட்டமைத்த விதத்தில் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் நான் எந்த காலத்திலும் அனுபவத்தில் இருந்தது இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய அனுபவத்தை காட்டும்

வகையில் இந்நீதிமன்றத்தில் எந்த ஒரு ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து அஞ்சம்மாளுக்கு சொந்தமானது என்பதை காட்டக்கூடிய எந்த ஒரு ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குகளை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை :- இல்லை.